DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC. No. | 42/2024 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ராஜீ |
| **Father Name** | ~ | ராமசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 16.07.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். இவ்வழக்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் எவ்வளவு ஆண்டுகளாக புகார்தாரர் உதயகுமார் என்பவரிடம் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 20 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். உதயகுமார் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் சீட்டு மற்றும் பைனான்ஸ் தொழில் மற்றும் தோல் சம்பந்தமாக தொழில் செய்து வருகிறார். புகார்தாரருக்கு வருடத்திற்கு எவ்வளவு வருவாய் ஈட்டி வருகிறார் என்றால் அதனை வருமானவரி கணக்கை பார்த்துதான் சொல்ல முடியும். 2013–2014 மற்றும் 2014–2015 ம் ஆண்டில் புகார்தாரர் எவ்வளவு வருவாய் ஈட்டினார் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

2014 ம் ஆண்டு நவம்வர் மாதம் புகார்தாரர் எதிரிக்கு ரூ.30,00,000/– தொகை கொடுத்ததாக குறிப்பிட்ட நிலையில் மேற்படி தொகை வங்கியில் இருந்த பெறப்பட்டு கொடுக்கப்பட்டதா என்றால் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. 10.11.2014 அன்று எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடனுறுதி சீட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அதனை தவிர்த்து ஒரு அசல் கிரைய ஆவணம் மற்றும் ஒரு அசல்

பொது அதிகார ஆவணம் ஆகியவற்றை எதிரி கொடுத்துள்ளார். எதிரி வேறு ஏதேனும் ஒப்புகை ரசீது கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

10.11.2014 அன்று எதிரி தொகையை பெற்றுக்கொண்டு ஒரு வருடத்தில் திருப்பி கொடுத்து விடுவதாக ஒப்புக் கொண்டதாக குறிப்பிட்ட நிலையில் அதன் பின்னிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும் முன்பு வரையில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே ஏதேனும் பண பரிவர்த்தனை மற்றும் ஆவணப்பூர்வமான தகவல்கள் ஏதேனும் பரிமாற்றம் செய்யப்பட்டதா என்றால் எதிரி வட்டித்தொகையாக ரூ.9,00,000/−த்தை இடைப்பட்ட வெவ்வேறு தேதியில் புகார்தாரருக்கு செலுத்தி உள்ளார். எதிரி ரூ.9,00,000/− செலுத்தியதற்கு எதிரிக்கு ஏதேனும் ரசீது வழங்கியுள்ளேனா என்றால் ரசீது கொடுத்தோம். அந்த ஆவணத்தை Unofficial என்பதால் பின்னிட்டு அழித்து விட்டோம்.

மேற்படி ரூ.9,00,000/− தொகை எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என ஆவணம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். புகார் மனுவில் 25.12.2020 அன்று எதிரி அன்டர்டேகிங் கடிதம் எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். 2014 ம் வருடம் கடன் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் 2020 ம் ஆண்டு எதிரி அன்டர்டேகிங் கடிதம் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. 22.12.2020 தேதியிட்ட கடிதத்தை எதிரி எழுதி கொடுக்கவில்லை என்றாலும் அதில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு எதிரியை எவ்வழியில் தெரியும் என்றால் இருவரும் நண்பர்கள் ஆவார்கள்.

புகார்தாரர் எதிரி ஆகிய இருவரும் நண்பர்கள் என்பதால் புகார்தாரர் ஏற்கனவே ஆவணம் கொடுத்து கடன் பெற்றுள்ளதை திருப்புவதற்காக நண்பர் என்ற முறையில் எதிரி தனது சொத்து ஆவணம் மற்றும் பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிச் சீட்டு மற்றும் பூர்த்தி செய்யப்படாத காசோலை ஆகியவற்றில் கையொப்பம் மட்டும் செய்து நம்பிக்கையின் பேரில் புகார்தாரருக்கு கொடுத்துள்ளார் என்றாலும் அதனை தவறாக பயன்படுத்தி புகார்தாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. காலாவதியான கடனை காலவரைக்குள் கொண்டு வருவதற்காக தவறாக 25.12.2020 தேதியிட்ட அன்டர்டேகிங் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.1 ஆவணத்தில் புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட பரிவர்த்தனை எனக்கு நேரடியாக தெரியும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2014−2015 ஆண்டில் புகார்தாரர் எதிரிக்கு ரூ.30,00,000/− கடன் கொடுக்கும் அளவிற்கு எவ்வித வருவாயும் கிடையாது என்றாலும் அதற்குண்டான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல்

**செய்யவில்லை என்றாலும் சரியல்ல. காலாவதியான கடன் தொகைக்கு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.